ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1795/47 - 2013 පෙබරවාරි 01 වැනි සිකුරාදා - 2013.02.01
*1795/47 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 3/2/6/4/1/25.
காணி அமைச்சின் இல. : 04/3/12/2011/சீஈபீ/125.

மேல் கொத்மலை நீர் மின் திட்டத்தின் கீழ் எடிட் இல. 04 இன் பாதை இடிந்து விழுந்ததன் காரணமாக அதை மீள் அமைப்பதற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதைக் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

நுவரெலியா மாவட்டத்தில், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில், உடப்பனை வலயத்தில், கும்பல்ஒலுவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட மூ. வ. ப. 2826 இலக்கமுடையதும் 2013.01.03 ஆந் திகதியுடையதுமான மூல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 0.1337 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் குறிக்கப்படும் காணிகள் :

**1. துண்டு இல. 01**
காணியின் பெயர் : சொய்சிவத்தை ; விபரம் : – ; உரிமை கோருபவர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு, நுவரெலியா ; விஸ்தீரணம் : 0.1219 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**
காணியின் பெயர் : சொய்சிவத்தை ; விபரம் : – ; உரிமை கோருபவர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு, நுவரெலியா ; விஸ்தீரணம் : 0.0118 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 07 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு கொத்மலை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். எம். யூ. பீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கொத்மலை,
2013.01.29.

02-555

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : ம/அபி/03/226.

2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 1718/17ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கம். 3810 இல் துண்டு இல. 292 ஆனது துண்டு இல. 294, 295 மற்றும் 296 என கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத் தருகிறேன்.

**துண்டு இல. 294**
காணியின் பெயர் : மில்லகஹவத்த; விபரம் : வீட்டுத்தோட்டம், 40-50 வருட வயதுள்ள ஒரு பலா மரம், நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி, முட்டுச் சுவர் மற்றும் தண்ணீர் தாங்கி ஒன்றும் காணப்படுகின்றன; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: கே. அதுல ஜயந்த், கே. ஏ. நாலனீ மற்றும் டீ. ஏ. களுஆராச்சி, இல. 52/7, ஜயசிங்க மாவத்தை, ராகம பாதை, கடவத்தை ; விஸ்தீரணம் : 0.1786 ஹெக்டயார்.

மு. கு. - இவ்வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**துண்டு இல. 295**

காணியின் பெயர் : மில்லகஹவத்த; விபரம் : வீட்டுத்தோட்டம் 25-30 வருட வயதுள்ள 02 பலா மரங்கள், 8-10 வருட வயதுள்ள 05 மகோனி மரங்கள், முட்டுச் சுவர் ஒன்று, மலசலகூடம் ஒன்று மற்றும் ஒரு நிரந்தரக் கட்டிடம் காணப்படுகின்றது ; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: கே. அதுல ஜயந்த மற்றும் கே. ஏ. நாமணீ, இல. 52/7, ராஜசிங்க மாவத்தை, ராகம வீதி, கடவத்தை; விஸ்தீரணம் : 0.0871 ஹெக்டயார்.

**துண்டு இல. 296**

காணியின் பெயர் : மில்லகஹவத்த; விபரம் : வீட்டுத்தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: அதுல கேடரஸ், (பிறைவட்) லிமிடட், இல. 52/7, ஜயசிங்க மாவத்தை, ராகம பாதை, கடவத்தை ; விஸ்தீரணம் : 0.0093 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மஹர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தமரா டீ பெரேரா,
பிரதேச செயலாளர்,
மஹர.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மஹர,
2013.01.24.

02-553

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 3/2/6/4/1/13.
காணி அமைச்சின் குறிப்பு இல. : எல்டி/5/2006/சீஈபீ/496.

மேல் குறிப்பிட்ட தலைப்பின் கீழ் 2012.12.11 ஆந் திகதியின் இல. 1788/6 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிக்கப்பட்ட திகதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்க் குறிக்கப்படும் திகதி நியமிக்கப்படுகிறது என்பது இத்தால் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| நீக்கப்படும் திகதி | பதிலாக நியமிக்கப்படும் திகதி |
|---|---|
| 2013.01.03 | 2013.03.07 |

எச். எம். எம். யூ. பீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கொத்மலை,
2013.01.29.

02-554